
ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய!

# பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி அருளிய

# ஸ்ரீ அருணாசல அக்ஷரமணமாலை



பகவான் பணியில்

**பகவான் ஸ்ரீ ரமணமகரிஷி பீடம்**
**கொழும்பு, இலங்கை**

இடம்:- இல. 49, பெட்ரிகா வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு-06.

தொடர்புகளுக்கு:- திரு.பிரிந்தாபன் - 0777571968
திரு.சிபி 0714805019 திரு.பவளராஜா - 0777597120
திருமதி. ஈஸ்வரன் - 0771757118
சாராதா சேவாஸ்ரம் பருத்தித்துறை
தொலைபேசி : 0212263465

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி சரிதம்

மதுரைக்கு 60 கி.மீ. தொலைவிலுள்ள திருச்சுழியில் அழகம்மையார், சுந்தரனார் தம்பதிகளுக்கு 1879 டிசம்பர் 30ம் நாள், இரண்டாவது மகனாக வேங்கடராமன் என்ற ஸ்ரீரமண பகவான் அவதரித்தார். அப்போது பிரசவம் பார்க்க வந்த பார்வையற்ற ஒரு மூதாட்டிக்கு ஒளிவெள்ளமாய் ஓர் ஜோதி தரிசனம் கிடைத்தது.

வேங்கடராமனின் பள்ளிப்பருவத்தில், விளையாட்டில் இருந்த நாட்டம் படிப்பில் இல்லை. அபார ஞாபக சக்தி இருந்தாலும் புத்தகப்படிப்பு ரசிக்கவில்லை. அவரது 16-வது வயதில் மதுரையில் தனது சிற்றப்பாவின் வீட்டில் வசித்து வருகையில், ஒரு பேரதிசயம் நடந்தது. திடீரென்று வேங்கடராமனுக்கு மரண பயம் தோன்றிற்று. தான் இறக்கப்போகிறோம் என்ற எண்ணம் தீவிரமடையவே, அவர் அதை எதிர்கொள்ளும் வகையில் உடம்பை நீட்டிப்படுத்து, கண்களையும் வாயையும் மூடி, எந்தவொரு சலனமும் இல்லாமல் பிணம் போல் கிடந்தார். என் உடம்பு இறந்து விட்டது. உடலை மயானத்திற்கு சென்று எரிக்கிறார்கள். ஆனால் நம்முள்ளே, "நான், நான்" என்று ஒன்று விளங்கிக் கொண்டேயிருக்கிறது. அப்படியென்றால் "இறப்பது உடம்பேயன்றி நான் என்று விளங்கிக் கொண்டிருக்கும் ஆத்மா அல்ல" என்ற பேருண்மை புலனாயிற்று. அப்போது இருந்து வேங்கடராமனுக்கு மரண பயம் அடியோடு ஒழிந்து, ஜீவன்முக்தராக, பூரணஞானியாக மலர்ந்து விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுள்ளத்தே சிறுவயது முதல் மிகப்பெரிதென விளங்கிக்கொண்டிருக்கும் அருணாசல அருட்தந்தையை நாடி, 1896, செப்டெம்பர் 1-ம் தேதி திருவண்ணாமலை வந்தடைந்தார். "தந்தையே உன் ஆணைப்படி வந்தடைந்து விட்டேன்" என்று கூறி சுகக்கடல் பொங்க, சொல் உணர்வு அடங்க அருணையிலேயே நிரந்தரமாக தங்கி விட்டார். வீட்டிற்கு திரும்ப அழைக்க வந்த அன்னைக்கு எழுதியருளிய "அவரவர் பிராரப்தப் பிரகாரம் அதற்கானவன் ஆங்காங்கு இருந்து ஆட்டுவிப்பன்; என்றும் நடவாதது என் முயற்சிக்கினும் நடவாது; நடப்பது என் தடை செய்யினும் நில்லாது; இதுவே திண்ணம் ஆதலில் மௌனமாய் இருக்கை நன்று" என்பதே பகவான் அருளிய முதல் உபதேசமாகும்.

சில ஆண்டுகளில் தாயும், பகவானுடன் வந்து சேர்ந்தார். விருபாட்சி குகையிலும், கந்தாசிரமத்திலும் தொண்டர்களுக்கும் பக்தர்களுக்கும் அமுது செய்வித்த அன்னைக்கு 1922-ம் ஆண்டு மே மாதம் 19-ம் தேதி, பகவான் முக்திப்பேறு அளித்தார். அன்னைக்கு மலையடிவாரத்தில் பாலி தீர்த்தக்கரையில் ஓர் அழகிய ஆலயம் அமைந்தது. இது இன்று மாபெரும் ஸ்ரீரமணாச்ரமமாக வளர்ந்திருக்கிறது. பெரும்பாலும் பகவான் மௌனத்தினாலேயே உபதேசம் செய்தார். எல்லா உயிர்களிடத்திலும் சமமான அன்பைக் காட்டினார். அதற்கு எடுத்துக்காட்டாக லட்சுமி பசு, காக்கை, ஜாக்கிநாய், மான் ஆகியவற்றிற்கு சமாதியும் வைத்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் என்பது எண்ணங்களின் குவியல் தான். எண்ணங்கள் இல்லாதபோது, மனம் என்ற ஒன்று இல்லை. எண்ணங்கள் அழிய, மனம் தனது பிறப்பிடமான ஆத்மாவில் அடங்கி, ஒடுங்கிவிடும். ஒவ்வொரு எண்ணமும் எழும்போது, "இது யாருக்கு எழுகிறது"? என்று கேட்டு அது எனக்கு என்றதும், "நான் யார்"? என்று விசாரித்தால் அந்த எண்ணம் முழுமையாக மறைந்து விடும். இப்படி பழகப்பழக மனம் முழுமையாக உள்முகப்பட்டு, ஆத்மாவில் ஒடுங்கி விடும். உண்மையான "நான் என்னும் ஆத்மாவே நிலையாக எஞ்சியிருக்கும்". இதுதான் ரமண மகாயோகத்தின் சாரம். பக்தி வழியில் தான் வணங்கும் இறைவனையோ அல்லது குருவையோ முழுமையாகச் சரணடைந்து விட்டால், மனம் ஒடுங்கி, எண்ணங்கள் அழிந்து, ஆன்ம சுகம் பெறலாம் என்றும் பகவான் அளியிருக்கிறார். இத்தகைய மிக அற்புத ஆன்மீகத் தத்துவத்தை சர்வ எளிமையாக, எவரும் புரிந்து கொண்டு பயில பகவான் அருளிய பாடல்களே உள்ளது. நாற்பது உபதேச உந்தியார் போன்றவை உபநிஷதங்களுக்கு ஒப்பான, பகவான் காட்டிய நேர் வழியின் விளக்கங்களாம்.

பகவான் அருணாசலத்தை அடைந்தது முதல் தனது தேக வாழ்வில் இறுதி வரை 54 ஆண்டுகள் திருவண்ணாமலையை விட்டு ஒரு கணமும் அகலாமல் வாழ்ந்து வந்தார். பகவான் தனது பூத உடலை 1950 ஏப்ரல் 14-ம் தேதி நீத்தார். அப்பொழுது ஒரு ஜோதி தோன்றி வால்நட்சத்திரமாய் வானில் நீந்தி அருணாசல மலையில் உச்சியில் அடங்கியது. உடல் உதித்தபோது ஒரு ஜோதி, உடலை நீக்கும் போதும் ஒரு ஜோதி, "நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலல்ல, என்றும் ஒளிரும் ஆத்மாதான்" என்ற பகவான் கூற்றிற்கு ஏற்ப இன்றும் திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாச்சரமத்தில் பகவான் ரமணரின் அருளும் சாந்நித்தியமும், சாந்தியும் நிலவுகிறது. எங்கெங்கிருந்தாலும் பக்வானை வழிபடும் பக்தர்கள் பரம சாந்தியையும், பூரண மனநிம்மதியையும் பெற்று பரவசமடைகிறார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போலாகும்.

வாழ்க பகவான் ரமணரின் நாமம்,
பெருகுக அவர்தம் அடியார்கள்.
அன்பொடு உன் நாமம்கேள் அன்பர்தம் அன்பருக்கு
அன்பன் ஆயிடஅருள் அருணாசலா.

வாழி வாழி ரமண மகாகுரு
வாழி வாழி அருண மகாகிரி
வாழி வேங்கடவன் வாய் சொலும் பாடல்கள்
வாழியுழி தோர் அன்பர்கள் வாழியே!

## ஸ்ரீ அருணாசல அக்ஷரமணமாலை பற்றி

பகவான் ஸ்ரீரமண மகரிஷிகள் அண்ணாமலைச் சாரலிலுள்ள விருபாட்ச குகையில் வசித்த காலம் (1914) அது. அவருடைய மெய்யன்பர்கள் தாங்கள் பிச்சை எடுக்கச் செல்லும் போதும் தங்களுக்கென்று தனியாக ஒரு பாட்டு புனைந்தருளுமாறு பகவானை வேண்டினர். அந்த வேண்டுகோளுக்கு இணங்கி, ஒரு நாள் கிரிவலம் வரும்போது பகவானால் அவருடைய முயற்சி சிறிதுமின்றி உள்ளத்தில் ஊற்றுப் பெருகுவது போல் தோன்றி, பக்தி பரவசத்துடன் எழுதப்பட்ட பாடல்களே அருணாசல அக்ஷரமணமாலை, அருணாசலக் கடவுளின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல் அன்பன் ரமணன், நாயகன் - நாயகி பாவத்தில் எழுதிய இப்பாடல்களின் எண்ணிக்கை 108 என்பதால், இவை அர்ச்சனைக்கு உகந்த தோத்திரப் பாடல்களாம்.

பகவான் அகர வரிசையில் அட்சரங்கள் ஒவ்வொன்றால் ஒவ்வொரு பாடலை ஆரம்பித்து எழுதியதாலும், அவை அருள் மணம் வீசும் பாடல் பூக்களால் புனைந்த மாலை என்பதாலும், அதற்கு அக்ஷரமணமாலை என்ற பெயர் சூட்டப்பட்டது. ரமண பகவான் அருணாசல பகவான் மீது இயற்றிய பாடல்கள் என்பதால் அருணாசல அக்ஷர மணமாலை என்ற பெயர் நிலைத்தது. இதன் ஒப்பில்லாத சிறப்பு எது எனின் தெய்வமே, (ரணம பகவானே) தெய்வத்தின் மேல் இயற்றிய பாடல்கள் என்பதாம். அதனால் இப்பாடல்கள் பூரண தெய்வத்தன்மையும் அழிவில்லா சிரஞ்சீவி தன்மையும் உடையவையாகும்.

அன்பர்கள் இப்பாடல்களின் பொருளைக் கேட்டறிய விரும்பியபோது பகவான், "நீர்தான் அவற்றின் பொருளைச் சொல்லுமே! ஏதாவது நினைத்து எழுதியிருந்தால் அதற்கான பொருளைக் கூறலாம். எப்படியோ எழுந்தவை அவை" என்று கூறிவிட்டார். பிறிதொரு சமயம் பகவான், அதற்கு அர்த்தம் அதைப் பாராயணம் செய்வதுதான்" என்று உறுதியாக அருள் உபதேசம் செய்தார். அன்றிலிருந்து பகவான் பக்தர்கள் அருணாசல அக்ஷரமணமாலையை வேதமாகப் போற்றி தினம் ஓதி நீங்காத செல்வமும், நிறைவான மனநிம்மதியும், சாந்தியும் அடைந்து வருகின்றனர் என்பது அனுபவ உண்மை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ அருணாசல அக்ஷரமணமாலை

அருணாசல வரற்கு ஏற்ற அக்ஷரமண மாலைசாற்றக் கருணாகர கணபதியே கரம் அருளிக் காப்பாயே.

**அருணாசலசிவ அருணா சலசிவ**
**அருணாசலசிவ அருணாசலா!**
**அருணாசலசிவ அருணா சலசிவ**
**அருணாசலசிவ அருணாசலா!!**

1. அருணா சலம் என அகமே நினைப்பவர்
அகத்தை வேர் அறுப்பாய் அருணாசலா! (அ)

2. அழகு சுந்தரம்போல் அகமும் நீயுமுற்று
அபின்னமாய் இருப்போம் அருணாசலா! (அ)

3. அகம்புகுந்து ஈர்த்துஉன் அககுகை சிறையாய்
அமர்வித்தது என்கொல் அருணாசலா! (அ)

4. ஆருக்கா எனைஆண்டனை அகற்றிடில்
அகிலம் பழித்திடும் அருணாசலா! (அ)

5. இப்பழி தப்புஉனை ஏன்நினைப் பித்தாய்
இனியார் விடுவார் அருணாசலா!(அ)

6. ஈன்றிடும் அன்னையிற் பெரிதருள் புரிவோய்
இதுவோ உனதருள் அருணாசலா! (அ)

7. உனையே மாற்றி ஓடாது உளத்தின்மேல்
உறுதியய் இருப்பாய் அருணாசலா! (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. ஊர்சுற்று உளம்விடாது உனைக்கண்டு அடங்கிட
உன்னழகைக் காட்டு அருணாசலா! (அ)

9. எனையழித்து இப்போது எனைக்கலவா விடில்
இதுவோ ஆண்மை அருணாசலா! (அ)

10. ஏன்இந்த உறக்கம் எனைப்பிறர் இழுக்க
இதுஉனக்கு அழகோ அருணாசலா! (அ)

11. ஐம்புலக் கள்வர் அகத்தினிற் புகும்போது
அகத்தில்நீ இலையோ அருணாசலா! (அ)

12. ஒருவனாம் உன்னை ஒளித்தெவர் வருவார்
உன்சூதே இது அருணாசலா! (அ)

13. ஓங்காரப் பொருள் ஒப்புயர்வு இல்லோய்
உனையார் அறிவார் அருணாசலா! (அ)

14. ஔவைபோல் எனக்குன் அருளைத் தந்துஎனை
ஆளுவது உன்கடன் அருணாசலா! (அ)

15. கண்ணுக்குக் கண்ணாய்க் கண்இன்றிக் காண்உனைக்
காணுவது எவர்பார் அருணாசலா! (அ)

16. காந்தம் இரும்புபோல் கவர்ந்துஎனை விடாமல்
கலந்தெனோடு இருப்பாய் அருணாசலா! (அ)

17. கிரிஉரு ஆகிய கிருபைக் கடலே
கிருபைகூர்ந்து அருளுவாய் அருணாசலா! (அ)

18. கீழ்மேல் எங்கும் கிளர்ஒளி மணியென்
கீழ்மையைப் பாழ்செய் அருணாசலா! (அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. குற்றமுற்று அறுத்தெனைக் குணமாய்ப் பணித்தாய்
குருஉருவாய் ஒளிர் அருணாசலா! (அ)

20. கூர்வாட் கண்ணியர் கொடுமையிற் படாதருள்
கூர்ந்துஎனைச் சேர்ந்தருள் அருணாசலா! (அ)

21. கெஞ்சியும் வஞ்சியாய்க் கொஞ்சமும் இரங்கிலை
அஞ்சல்என்றே அருள் அருணாசலா! (அ)

22. கேளாது அளிக்கும்உன் கேடுஇல் புகழைக்
கேடுசெய்யாது அருள் அருணாசலா! (அ)

23. கையினிற் கனிஉன் மெய்ரசம் கொண்டுஉவகை
வெளி கொளவருள் அருணாசலா! (அ)

24. கொடியிட்டு அடியரைக் கொல்லுனைக் கட்டிக்
கொண்டுஎங்ஙன் வாழ்வேன் அருணாசலா! (அ)

25. கோபம்இல் குணத்தோய் குறியாய் எனைக்கொளக்
குறைஎன் செய்தேன் அருணாசலா! (அ)

26. கௌதமர் போற்றும் கருணைமா மலையே
கடைக்கணித்து ஆள்வாய் அருணாசலா! (அ)

27. சகலமும் விழுங்கும் கதிரொளி இனமன
சலசம லர்த்தியிடு அருணாசலா! (அ)

28. சாப்பாடு உன்னைச் சார்ந்து உணவாயான்
சாந்தமாய்ப் போவன் அருணாசலா! (அ)

29. சித்தங் குளிரக்கதிர் அத்தம்வைத்து அமுத
வாயைத்திற அருண்மதி அருணாசலா! (அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. சீரை அழித்து நிர்வாணமாச் செய்துஅருள்
சீரை அளித்தருள் அருணாசலா! (அ)

31. சுகக்கடல் பொங்கச் சொல்லுணர்வு அடங்கச்
சும்மா பொருந்திடுஅங்கு அருணாசலா! (அ)

32. சூதுசெய்து என்னை சோதியாது இனிஉன்
சோதி உருக்காட்டு அருணாசலா! (அ)

33. செப்படி வித்தைகற்று இப்படி மயக்குவிட்டு
உருப்படு வித்தைகாட்டு அருணாசலா! (அ)

34. சேராய் எனின்மெய் நீராய் உருகிக்கண்
நீராற்று அழிவேன் அருணாசலா! (அ)

35. சைஎனத் தள்ளில் செய்வினை சுடும்அலால்
உய்வகை ஏதுஉரை அருணாசலா! (அ)

36. சொல்லாது சொலிநீ சொல்லற நில்என்று
சும்மா இருந்தாய் அருணாசலா! (அ)

37. சோமியாய்ச் சும்மா சுகம்உண்டு உறங்கிடில்
சொல்வேறு என்கதி அருணாசலா! (அ)

38. சௌரியங் காட்டினை சழக்கு அற்றது என்றே
சலியாது இருந்தாய் அருணாசலா! (அ)

39. ஞமலியில் கேடா நான்என் உறுதியால்
நாடிநின் உறுவேன் அருணாசலா! (அ)

40. ஞானம்இல்லாதுஉன் ஆசையால் தளர்வுஅற
ஞானந் தெரித்தருள் அருணாசலா! (அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41. ஞிமிறுபோல் நீயும் மலர்ந்திலை என்றே
நேர் நின்றனைஎன் அருணாசலா! (அ)

42. தத்துவம் தெரியாது அத்தனை உற்றாய்
தத்துவம் இதுவென் அருணாசலா! (அ)

43. தானே தானே தத்துவம் இதனைத்
தானே காட்டுவாய் அருணாசலா! (அ)

44. திரும்பி அகந்தனைத் தினம் அகக் கண்காண்
தெரியும் என்றனைஎன் அருணாசலா! (அ)

45. தீரம்இல் அகத்தில் தேடிஉந்தனை யான்
திரும்பஉற்றேன் அருள் அருணாசலா! (அ)

46. துப்பறிவு இல்லா இப்பிறப்பு என்பயன்
ஒப்பிட வாயேன் அருணாசலா! (அ)

47. தூய்மன மொழியர் தோயும்உன் மெய்அகம்
தோயவே அருள்என் அருணாசலா! (அ)

48. தெய்வமென்று உன்னைச் சாரவே என்னைச்
சேர ஒழித்தாய் அருணாசலா! (அ)

49. தேடாது உற்றநல் திருவருள் நிதிஅகத்
தியக்கம் தீர்த்துஅருள் அருணாசலா! (அ)

50. தைரியமோடும் உன் மெய்யகம் நாடயான்
தட்டழிந்தேன் அருள் அருணாசலா! (அ)

51. தொட்டு அருள் கைமெய் கட்டிடாய் எனில்யான்
நட்டமாவேன் அருள் அருணாசலா! (அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

52. தோடம்இல் நீஅகத்தோடு ஒன்றி என்றும்
சந்தோடம்ஒன்றிட அருள் அருணாசலா! (அ)

53. நகைக்குஇடம் இலைநின் நாடிய எனைஅருள்
நகையிட்டுப் பார்நீ அருணாசலா! (அ)

54. நாணிலை நாடிட நானாய் ஒன்றிநீ
தாணுவாய் நின்றனை அருணாசலா! (அ)

55. நின்எரி எரித்தெனை நீறு ஆக்கிடுமுன்
நின்அருள் மழைபொழி அருணாசலா! (அ)

56. நீநான் அறப்புலி நிதம்களி மயமாய்
நின்றிடு நிலை அருள் அருணாசலா! (அ)

57. நுண்ணுரு உனையான் விண்ணுரு நண்ணிட
எண்அலை இறுமென்று அருணாசலா! (அ)

58. நூலறிவு அறியாப் பேதையன் என்தன்
மால்அறிவு அறுத்தருள் அருணாசலா! (அ)

59. நெக்குநெக்கு உருகியான் புக்கிட உனைப்புகல்
நக்கனா நின்றனை அருணாசலா! (அ)

60. நேசம்இல் எனக்குஉன் ஆசையைக் காட்டிநீ
மோசம் செயாதுஅருள் அருணாசலா! (அ)

61. நைந்துஅழி கனியால் நலன்இலை பதத்தில்
நாடிஉட் கொள்நலம் அருணாசலா! (அ)

62. நொந்திடாது உன்தனைத் தந்துஎனைக் கொண்டிலை
அந்தகன் நீஎனக்கு அருணாசலா! (அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

63. நோக்கியே கருதிமெய் தாக்கியே பக்குவம்
ஆக்கிநீ ஆண்டருள் அருணாசலா! (அ)

64. பற்றிமால் விடம்தலை உற்றுஇறு முனம்அருள்
பற்றிட அருள்புரி அருணாசலா! (அ)

65. பார்த்தருள் மால்அறப் பார்த்திலை எனின்அருள்
பார்உனக்கு ஆர்சொல்வர் அருணாசலா! (அ)

66. பித்துவிட்டு உனைநேர் பித்தன் ஆக்கினைஅருள்
பித்தம் தெளிமருந்து அருணாசலா! (அ)

67. பீதிஇல் உனைச்சார் பீதியில் எனைச்சேர்
பீதிஉன் தனக்குஎன் அருணாசலா! (அ)

68. புல்லறிவு ஏதுஉரை நல்லறிவு ஏதுஉரை
புல்லிடவே அருள் அருணாசலா! (அ)

69. பூமண மாமனம் பூரண மணம்கொளப்
பூரண மணம்அருள் அருணாசலா! (அ)

70. பெயர்நினைத் திடவே பிடித்து இழுத்தனைஉன்
பெருமையார் அறிவார் அருணாசலா! (அ)

71. பேய்த்தனம் விடவிடாப் பேயாப் பிடித்துஎனைப்
பேயன் ஆக்கினைஎன் அருணாசலா! (அ)

72. பைங்கொடியாய் நான் பற்றின்றி வாடாமல்
பற்றுக் கோடாய்க்கா அருணாசலா! (அ)

73. பொடியான் மயக்கிஎன் போதத்தைப் பறித்துஉன்
போதத்தைக் காட்டினை அருணாசலா! (அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

74. போக்கும் வரவும்இல் பொதுவெளியினில் அருட்
போராட்டம் காட்டு அருணாசலா! (அ)

75. பௌதிகம் ஆம்உடல் பற்றுஅற்று நாளும்உன்
பவிசுகண்டு உறவருள் அருணாசலா! (அ)

76. மலைமருந்து இடநீ மலைத்திடவோ அருள்
மலைமருந்தாய் ஒளிர் அருணாசலா! (அ)

77. மானங்கொண்டு உறுபவர் மானத்தை அழித்து
அபிமான மில்லாதுஒளிர் அருணாசலா! (அ)

78. மிஞ்சிடில் கெஞ்சிடும் கொஞ்ச அறிவன்யான்
வஞ்சியாது அருள்எனை அருணாசலா! (அ)

79. மீகாமன் இல்லாமல் மாகாற்று அலைகலம்
ஆகாமல் காத்தருள் அருணாசலா! (அ)

80. முடிஅடி காணா முடிவிடுத்து அனைநேர்
முடிவிடக் கடனிலை அருணாசலா! (அ)

81. மூக்கிலன் முன்காட்டும் முகுரம் ஆகாதுஎனைத்
தூக்கி அணைந்துஅருள் அருணாசலா! (அ)

82. மெய்யகத் தின்மன மென்மலர் அணையில்நாம்
மெய் கலந்திடஅருள் அருணாசலா! (அ)

83. மேன்மேல் தாழ்ந்திடும் மெல்லியர்ச் சேர்ந்துநீ
மேன்மை உற்றனைஎன் அருணாசலா! (அ)

84. மையல் நீத்த அருள் மையினால் உனதுஉண்
மைவசம் ஆக்கினை அருணாசலா! (அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

85. மொட்டை அடித்தெனை வெட்ட வெளியில்நீ
நட்டம் ஆடினைஎன் அருணாசலா! (அ)

86. மோகம் தவிர்த்துஉன் மோகமா வைத்தும்என்
மோகம் தீராய்என் அருணாசலா! (அ)

87. மௌனியாய் கல்போல் மலராது இருந்தால்
மௌனம் இதுஆமோ அருணாசலா! (அ)

88. யவன்என் வாயில் மண்ணினை அட்டி
என்பிழைப்பு ஒழித்தது அருணாசலா! (அ)

89. யாரும் அறியாதுஎன் மதியினை மருட்டி
எவர்கொளை கொண்டது அருணாசலா! (அ)

90. ரமணன்என்று உரைத்தேன் ரோசம் கொளாதுஎனை
ரமித்திடச் செயவா அருணாசலா! (அ)

91. ராப்பகல் இல்லா வெறுவெளி வீட்டில்
ரமித்திடு வோம்வா அருணாசலா! (அ)

92. லட்சியம் வைத்தஅருள் அஸ்திரம் விட்டுஎனைப்
பட்சித்தாய் பிராணனோடு அருணாசலா! (அ)

93. லாபநீ இகபர லாபம்இல் எனைஉற்று
லாபம்என் உற்றனை அருணாசலா! (அ)

94. வரும்படி சொலிலை வந்துஎன் படிஅள
வருந்திடுஉன் தலைவிதி அருணாசலா! (அ)

95. வாவென்று அகம்புக்குஉன் வாழ்வுஅருள் அன்றேஎன்
வாழ்வுஇழந்தேன் அருள் அருணாசலா! (அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

96. விட்டிடில் கட்டமாம் விட்டிடாது உனைஉயிர்
விட்டிட அருள்புரி அருணாசலா! (அ)

97. வீடுவிட்டு ஈர்த்துஉள வீடுபுக்குப் பையஉன்
வீடுகாட்டினை அருள் அருணாசலா! (அ)

98. வெளிவிட்டேன் உன்செயல் வெளித்திடாது உன்அருள்
வெளிவிட்டு எனைக்கா அருணாசலா! (அ)

99. வேதாந்தத்தே வேறுஅற விளங்கும்
வேதப் பொருள்அருள் அருணாசலா! (அ)

100. வைதலை வாழ்த்தா வைத்துஅருள் குடியா
வைத்துஎனை விடாதுஅருள் அருணாசலா! (அ)

101. அம்புவில் ஆலிபோல் அன்புஉரு உனில்எனை
அன்பாக் கரைத்துஅருள் அருணாசலா! (அ)

102. அருணைஎன்று எண்ணயான் அருள்கண்ணி பட்டேன்
உன்அருள்வலை தம்புமோ அருணாசலா! (அ)

103. சிந்தித்து அருள்படச் சிலந்திபோல் கட்டிச்
சிறையிட்டு உண்டனை அருணாசலா! (அ)

104. அன்பொடுஉன் நாமம்கேள் அன்பர்தம் அன்பருக்க
அன்பன் ஆயிடஅருள் அருணாசலா! (அ)

105. என்போலும் தீனரை இன்புறக் காத்துநீ
எந்நாளும் வாழ்ந்துஅருள் அருணாசலா! (அ)

106. என்புருகு அன்பர்தம்இன்சொற்கொள்செவியும்
என் புன்மொழி கொளஅருள் அருணாசலா! (அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

107. பொறுமையாம் பூதர புன்சொலை நன்சொலாப்
பொறுத்துஅருள் இஷ்டம்பின் அருணாசலா! (அ)

108. மாலை யளித்து அருணாசல ரமணஎன்
மாலை அணிந்துஅருள் அருணாசலா! (அ)

**அருணா சலசிவ அருணா சலசிவ**
**அருணா சலசிவ அருணாசலா!**
**அருணா சலசி அருணா சலசிவ**
**அருணா சலசிவ அருணாசலா!!**

அருணாசலம் வாழி அன்பர்களும் வாழி
அசரமணமாலை வாழி

## ஸ்ரீ அருணாசல பஞ்சரத்னம்

உன்னிடத்தில் ஒப்புவித்த உள்ளத்தால் எப்பொழுதும்
உன்னைக் கண்டு எல்லாமும் உன் உருவாய் - அன்னியம் இல
அன்பு செயும் அன்னோன் அருணாசலா வெல்கும்
இன்பு உருவாம் உன்னில் ஆழ்ந்தே.

- பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி

முதல் பதிப்பு 2011 - பிரதிகள் 1000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## * அன்பர்களின் கவனத்திற்கு *

பகவான் ஸ்ரீ ரமணமகரிஷி அருளிய ஸ்ரீ அருணாசல அக்ஷரமணமாலை பாடலை அன்பர்கள் அனைவரும் ஓதி உயர்வடைய வேண்டும் என்பது ஸ்ரீ பகவானது விருப்பம்.

இப்பாடல் அன்பர்கள் தங்கள் இல்லவிழா மற்றும் அனைத்து ஆன்மீக நிகழ்ச்சிகள், திருக்கோயில் வார வழிபாட்டு நிகழ்ச்சிகள் அனைத்திலும் படித்து பயனடைய வேண்டிய அற்புத ஞான மந்திரம் ஆகும்.

தேவைப்படும் அன்பர்கள் கடிதம் எழுதினால் ஸ்ரீ பகவான் படத்துடன் இலவசமாக உடனே அனுப்பி வைக்கப்படும்.

பகவான் பணியில்

**ஸ்ரீ ரமணாச்ரமம்**
**திருவண்ணாமலை - 606603**
**தமிழ் நாடு, இந்தியா.**
**தொலைபேசி :** 04175-237292 / 237200
**மின்னஞ்சல் :** ashram@sriramanamaharshi.org
**இணையதளம் :** www.sriramanamaharshi.org

**ஸ்ரீ ரமணமகரிஷி ஆஸ்ரம் திருவண்ணாமலையின் பதிப்புக்கள், புத்தகங்கள் அனைத்தும் விற்பனைக்கு கிடைக்கும் இடம் : பூபாலசிங்கம் புத்தகசாலை 202, கடற்கரை வீதி, கொழும்பு-11. ஸ்ரீ லங்கா தொலைபேசி : 2422321**

Esan Printers 0779282253

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org